# ஆரோக்கிய மாதாவே

ஆரோக்கிய மாதாவே
உமது புகழ் பாடித் துதித்திடுவோம் } 2
எந்நாளும் பாடித் துதித்திடுவோம்

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில் } 2
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகைக் கலைகளும் பாரினில் துலங்கிட
அனைவருக்கும் துணை புரிந்தாயே - 2

(ஆரோக்கிய..... பாடித் துதித்திடுவோம்)

தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும் } 2
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
அருள் ஓங்கிட எங்கும் நிறைந்தாயே -2